காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 24 சனிக்கிழமை 09.08.2025 கதிர் 273

## இது ரகசியம் அல்ல!

ஜி.எல்.பீரிஸ் என்ற அரசியல் வாதியை வாசகர்களில் பலருக்கும் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றேன். ஒரு காலத்தில் தமிழர் அரசியல் ☞ 2

# 2029இல் மீண்டும் ஆட்சியை பெரமுனவே கைப்பற்றுமாம்

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவில் இருந்து பிரிந்துச் சென்றவர்கள் வெகுவிரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள். கட்சியின்பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும். 2029 ஆம் ஆண்டு நாங்களே ஆட்சியை கைப்பற்றுவோமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

சமகாலஅரசியல்நிலவரம்குறித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காலத்தின் போது பல்வேறு காரணிகளால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியில் மீண்டும்ஒன்றிணைவதற்குஇணக்கம் தெரிவித்துள்ளனர்.

கட்சியில் இருந்து விலகிச் ☞ 2

# பிள்ளையானின் கடிதம் தொடர்பாக மட்டு. மாநகர மேயரிடம் விசாரணை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையிலும் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் ஆகியோருக்கு முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்த கடிதம் அனுப்பியது தொடர்பில் மட்டு. மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதனிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சிஐடி) வியாழக்கிழமை விசாரணை நடத்தியுள்ளனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ள சம்பவம் தொடர்பாக 2025 ஏப்பிரல் 6 அன்று சந்தேகத்தில் சிஐடியினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் ☞ 2

# விழுமிய வளர்ச்சி, தொழிற் கல்வியே கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கங்கள்

## பிரதமர் ஹரினி தெரிவிப்பு

பிள்ளைகளிடம்விழுமியங்களை வளர்ப்பதும், பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய பிள்ளைகளை தொழிற்கல்விக்கு வழிநடத்துவதும் அதன் மூலம் நாட்டின்பொருளாதாரவளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதும்கல்விசீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும் என்று பிரதமர்கலாநிதிஹரிணிஅமரசூரிய தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடலொன்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஆயர்களுடன் கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணியின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. ☞ 2

# அரியநேந்திரன் கடிதம்

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தி கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில்வட,கிழக்குமாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டேர்க்குக்குகடிதமொன்றைஅனுப்பிவைத்துள்ளார்.

வட, கிழக்கு மாகாணங்களில் இயங்கிவரும் தமிழ் அரசியல் கட்சிகள் சிலவும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கம் ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்பேரவையின்60ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அறிக்கை குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி கடந்த வாரம் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டேர்க் மற்றும் பேரவையில் அங்கம்வகிக்கும் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

அதன்தொடர்ச்சியாகஇலங்கையில்பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கானபொறுப்புக்கூறலைவலியுறுத்தி பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஐக்கிய ☞ 2

# வடக்கின் சிறந்த மரதனோட்ட வீரர் வியாழன் இரவு வெட்டிக் கொலை

## கொக்குத்தொடுவாய் களப்பில் கொடூரச் செயல்

வடக்கு மாகாணத்தின் மிகச் சிறந்த மரதனோட்ட வீரர்களில் ஒருவரான ஜெயராஜ் சுபராஜ் என்ற 21 வயது இளைஞன் கொக்குத்தொடுவாய் களப்புப் பகுதியில் தொழிலுக்குச் சென்றிருந்த சமயம் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் களப்பு கடலில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய், கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில்கொக்குத்தொடுவாய்களப்புகடலில்இரவு மீன்பிடித் தொழிலுக்காக அவர் வியாழக்கிழமை சென்றிருந்தார். நேற்று அதிகாலை ☞ 2

# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கும் எண்ணம் கிடையாது

## ஆளும்தரப்பை சாடும் சிறீதரன் எம்.பி.

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும் மனநிலையில் ஆளும்தரப்பு இல்லையென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அரசியல்கைதிகள்விடுதலைதொடர்பில் நீதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஜூலை 23 நாடாளுமன்றக்குழுத்தலைவர் என்ற ரீதியில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் சபாநாயகருக்கும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் நிலஅபகரிப்பு, மனித புதைகுழிகள் தொடர்பான விடயங்கள் பேசுவதற்கான ☞ 2

# ஒவ்வொரு மாதமும் 40 இளைஞர்கள் புதிதுபுதிதாக குற்றங்கள் புரிகின்றனர்

## குற்றவியல் நிபுணர் தம்மிக்க தகவல்

ஒவ்வொரு மாதமும் சுமார் 40 இளைஞர்கள் புதிதாக குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கை பொலிஸ் பயிற்சி கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளரும் குற்றவியல் நிபுணருமான தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார். ☞ 2

# மண்ணையும் வாழ்வையும் காத்துக்கொள்ள போராடுவதைத் தவிர வேறுவழியேயில்லை

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள் அறிவிப்பு

மன்னார் தீவில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு விடயத்தில் ஆளும்தரப்பு ஒரே நிலைப்பாட்டில் காணப்படுகின்றமையினால் மன்னார் மக்கள் மண்ணையும், வாழ்வியலையும் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து ஜனநாயக ரீதியில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லையென மன்னார் மாவட்ட பொது அமைப்பின் பிரதிநிதிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

காற்றாலை அமைத்தல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று மதியம் மன்னாரில் இடம் பெற்றது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் சிவகரன், மீனவ அமைப்பின் பிரதிநிதி ஆலம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் சிவகரன் தெரிவித்ததாவது: ☞ 2

# எதிர்க் கட்சிகள் சதிகளில் ஈடுபடவில்லை ஆளும்தரப்புக்குள்ளேயே அது நடக்கிறது

## ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் எம்.பி. தெரிவிப்பு

ஆளும்தரப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சதித்திட்டம் மேற்கொள்வதாக தெரிவிப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. ஆளும்தரப்பிற்குள்ளேயே சதித்திட்டங்கள் இடம்பெறுகின்றன. அமைச்சர்வசந்தசமரசிங்கபிரதமருக்கு எதிராகதெரிவித்திருந்தகருத்து ☞ 6

## இனி இது .....

பரப்பில் அதிகம் அடிபட்ட பெயர்களில் ஒன்று. ஆனால் தேசிய மக்கள் சக்திய அரசியல் அலையின்பின்னர்காணாமல்போய்விட்டவர். தெற்கில்அநுரஅலைவேகமாகஅடித்தபின்னர் அரசியல் களத்தில் அவரைக் காணவில்லை. இப்போது மீண்டும் தலையைத் தூக்கியிருக்கிறார் என்பதுதான் செய்தி.

ஒரு கல்வியியலாளராக இருந்த பீரிஸை அரசியலுக்குள்கொண்டுவந்தவர்அம்மையார் சந்திரிகா குமாரணதுங்க. சந்திரிக்காவிற்கு மிக நெருக்கமாக இருந்தவர். தேசியப் பட்டியல் மூலம் அவரை அரசியலுக்குக் கொண்டு வந்தார் சந்திரிகா. ஆனால் வந்ததும் தான் ஒரு கல்வியியலாளர் என்பதைவிடப் பக்கா அரசியல் 'மெட்டீரியல்', தரமான அரசியல்வாதி என்பதை அவர் நிரூபித்தார். தன்னைஅரசியலுக்குக்கொண்டு வந்த சந்திரிக்காவையே வீழ்த்துவதற்கு எதிரணியுடன் கைகோர்த்தார்.

1994இல் அரசியலுக்குள் நுழைந்த பீரிஸ் 2001இல் சந்திரிக்காவின் காலம் முடிந்தபோது, அவரது ஆட்சியை வீழ்த்தும் விதத்தில் எழுச்சி பெற்றஐக்கியதேசியக்கட்சிதலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துகொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் வலுச் சமநிலையை எட்டியிருந்த காலப்பகுதி அது. அதனால் அவர்களுடன் அமைதிப் பேச்சு நடத்துவதற்கு ரணில் தலைமையிலான ஆளும்தரப்பு தயாராக இருந்தது. அந்தப் பேச்சுக் குழுவின் தலைமைப் பேச்சாளராக நியமிக்கப்பட்டவரும் இவர்தான்.

பல சுற்றுக்களில் பல நாடுகளில் நடந்த இந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் அரசியல்மதியுரைஞானஅன்ரன்பாலசிங்கம் தலைமையிலானகுழுவினருடன்பேசிஉள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுஒன்றைவழங்குவதற்கானஇணக்கத்தை எட்டியவர் இதே பீரிஸ்தான். அதன் பின்னர் தனது வழக்கமான அரசியல் அங்கிடுதத்தித் தனத்தால் ரணில் பக்கமிருந்து மகிந்த பக்கம் தாவினார். அமைச்சுப் பதவிகளை பஸில் ராஜபக்ச பொது ஜன பெரமுனவை உருவாக்கியபோது அவருடன் இணைந்து பெரமுனவின் தலைவர் பதவியையும் பெற்றுக்கொண்டார்.

ஒரு கட்டத்தில் இவரைப் புரிந்தகொண்ட ராஜபக்சக்கள் அவரைக் கழற்றிவிட்டார்கள். அதனால் மீண்டும் ரணிலுடன் சேர்ந்தார். ஆனால்அதனால்பயன்ஏதும்ஏற்படவில்லை. கடைசியில் அநுர அலை அடித்த பின்னர் அரசியலில்இருந்து காணாமற்போயிருந்தார். அநுர அலையுடன் அரசியலைவிட்டு ஒதுங்கியோடிப்போய் பதுங்கியவர்கள் பட்டியலில்இவரது பெயரும் முக்கியமானதாக இருந்தது. இருப்பினும்அவரதுவயதும்அவரை கடந்தஒருவருடகாலமாகக்கவனிக்கப்படாமல் போனதற்கு ஒரு காரணமாக இருந்தது.

இப்போது மெல்ல ஆமை தலையைத் தூக்கிப் பார்ப்பது போன்று அரசியலில் காலெடுத்து வைக்கப்பார்க்கிறார் பீரிஸ். அதன் முதற்படியாக ஓகஸ்ட் 7 நாரஹேன்பிட்டியில் உள்ள கிருல வீதியில் உள்ள தனது இல்லத்தில் சுமார் 17 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

தற்போதைய ஆளும்தரப்பின் நடவடிக்கைகள், தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை மற்றும் அமெரிக்க வரி விதிப்புகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டுஎதிர்காலஅரசியல்நடவடிக்கைகளை எவ்வாறு முன்னகர்த்துவது என்பது குறித்தே கூட்டத்தில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்-டுள்ளது.

ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான், பழனி, திகம்பரம் கபீர் ஹாஷிம், மனோ கணேசன், டி.வி.சானக, ரமேஷ் பத்திரண, ஷெஹான்சேமசிங்கஉள்ளிட்டநாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 17 பேர் இந்தக்கூட்டத்திற்குவருகைதந்திருக்கிறார்கள். கூட்டத்தில் உருப்படியான முடிவுகள் எவையும்எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பீரிஸ் மீண்டும் அரசியலுக்குள் நுழைவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் அக்கறை ஏதும் காட்டப்படவில்லை. இருந்தாலும் தனது அரசியல் மீள்நுழைவுக்கான வாய்ப்புக் குறித்து நாடிபிடித்தறியும் கூட்டமாக இதை அவர் நடத்தியிருக்கலாம் என்று கொழும்பில் செய்தியாளர்கள் கருதுகின்றனர்.

மற்றொருபுறத்தில் இலங்கை பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, 'கோட்டா கோ கம' போராட்டத்தின் பின்னர் தமது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார். தாம் அனைவரும் மீண்டும் ஒன்றிணைந்து அரசியலை முன்னெடுப்பது குறித்து அவர் அங்குஅவர்களுடன்கலந்துரையாடியிருந்தார். இந்தப் பின் புலத்திலேயே பீரிஸும் இப்போது அரசியலில் தனது தலையைத் தூக்கியிருக்கிறார். என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## விழுமிய வளர்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா பிள்ளைகளுக்கும் உயர்தரமாகக் கருதப்படும் வேலைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைப்பதில்லைஎன்பதுடன்,கடற்றொழில்,மின் பொறியியல்துறைமற்றும்வாகனபழுதுபார்ப்பு போன்ற தொழிற்கல்வித் துறைகளின் பெறுமதியை விளக்கி,அத்துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதற்கான அடித்தளத்தை பாடசாலைக்குள்ளேயே எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் பாடத்துறை நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவம், அந்த தேர்வு செயல்முறையை முறைப்படுத்துதல் மற்றும் பிள்ளைகளுக்கு சிறந்த தரமான கல்வியை வழங்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் மேன்மைதங்கிய ஆயர் ஹரோல்ட் அந்தோணி உள்ளிட்ட ஆயர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ் அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை முன்வைத்திருந்தேன். அதற்காகசந்தர்ப்பம்ஓகஸ்ட்வெள்ளிக்கிழமை கிடைத்துள்ளது.

குறித்த ஒரு நாள் விவாதத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட மனித புதைகுழிகளுக்கான சர்வதேச விசாரணை, காணிகள் அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தவுள்ளோம்.

எவ்வாறாயினும், அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையிலான பொதுமன்னிப்பு மற்றும் விடுதலை சம்பந்தமாக கேள்விகளை எழுப்பியபோது அதற்கு ஆளும்தரப்பு உருப்படியான பதில்கள் கிடைத்திருக்கவில்லை. இந்நிலையில் நாம் அரசுத் தலைவரைச் சந்திப்பதற்கு நடவடிக்கைகளைமுன்னெடுத்துவருகின்றோம் என்றார்.

## பிள்ளையானின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் ஜூலை 30 அன்று பிள்ளையான் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் மட்டு மாநகர முதல்வருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைமக்கள்பாவனைக்குகையளிப்பது தொடர்பாக என தலைப்பிடப்பட்டு அதில் கையொப்பம் இட்டு கடிதம் ஒன்றை கட்சி உறுப்பினர் ஒருவர் மாநகரசபை முதல்வரிடம் ஒப்படைத்துள்ளார்.

பிள்ளையான் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிஐடியின் கீழ் இருக்கும் போது கடிதம் ஒன்று வெளிவந்ததுடன் அது முகநூலில் பிரசுரிக்கப்பட்ட நிலையில் சம்பவதினமான நேற்று முன்தினம் சிஐடியினர் மாநகரசபைக்கு சென்று மாநகரசபை முதல்வரிடம் இந்த கடிதம் தொடர்பாக விசாரணை நடத்தினர்.

## அரியநேந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டேர்க்குக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பில்தீவிரகரிசனைவெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக இவ்விடயத்தில் உயராணையர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையின் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தன்மை, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் தொடரும் பேரவையின் தாமதம், சுயாதீனமானதும், நியாயமானதும், செயற்திறன்மிக்கதுமான செயன்முறையொன்றைஉருவாக்குவதற்குப் பதிலாக இலங்கை ஆளும்தரப்பில் தங்கியிருத்தல் என்பன தொடர்பில் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டும், ஐக்கியநாடுகள் கட்டமைப்புக்குள் நடைமுறைச்சாத்தியமான வேறு வழிமுறைகளைப் பரிந்துரைத்தல், உயராணையர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை முற்றுமுழுதாக சர்வதேசமயப்படுத்தி விரிவுபடுத்தல், சுயாதீனமானதும்பக்கச்சார்பற்றதுமான பொறிமுறையொன்றைப் பரிந்துரைத்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூடு மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் குறித்து சமீபத்திய காலங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இதை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிகழும் குற்றங்களை சர்வதேச மட்டத்துடன்ஒப்பிடும்போது, அதுஒருகுறிப்பிட்ட அளவிலான அதிகரிப்பைக் காட்டுவதாகவும் கடந்தசிலமாதங்களுக்குள்40-50வரையான இளைஞர்கள் புதிதாகக் குற்றச்செயல்களில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் முதல்தர குற்றவாளிகளாக சிறையிலடைக்கப்படுகின்றனர் என்றும் குற்றங்கள்அதிகரிப்பதுசர்வதேசஅளவில்ஒரு நாட்டிற்கு மிகப்பெரிய பாதகமாகுமெனவும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக இலங்கை மிகவும் நிலையற்ற நிலையில் இருந்து அதன் பொருளாதாரத்தை படிப்படியாகவலுப்படுத்திவரும்சூழ்நிலையில், குற்றம் நடப்பது ஒரு பயங்கரமான சோகம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 2029இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ன முன்னிலை சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும்,கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் நடைபெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக பேசப்பட்டன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துச் சென்றவர்கள் வெகுவிரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள்.கட்சியின் பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறது. 2029 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் அதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளோம் என்றார்.

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோது அவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அந்தப் பகுதியில் தொழிலுக்குச் சென்ற நபர் ஒருவர் சுபராஜ் வீதியில் வீழ்ந்து கிடப்பதை கண்டுள்ளார். அப்பகுதியில் யானை நடமாட்டம் அதிகமாகையால் யானை அடித்து விட்டதோ எனக் கருதி அந்த இளைஞனின் தந்தையையும், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரையும் விரைந்து அவ்விடத்திற்கு கூட்டிக்கொண்டு வந்து பார்த்தபோதே இளைஞனின் உடலில் வெட்டுக் காயங்கள் இருந்துள்ளமை தெரியவந்ததுள்ளது.

கொக்குளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் சம்பவஇடத்திற்குவந்துதீவிரவிசாரணைகளில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பிரதீபன் சடலத்தை பார்வையிட்டு மோப்பநாய் சகிதம் சோதனையை மேற்கொள்ளுமாறும், கைவிரல் அடையாள சோதனையையும் முன்னெடுக்குமாறும் , உடலத்தை உடற்கூறாய்விற்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

மோப்ப நாய் சகிதம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுபராஜ் சிறந்த மரதனோட்ட வீரனாவார். வடமாகாணத்தில் பல சாதனைகளை கடந்த காலங்களில் பெற்றிருக்கின்றார்.

## மண்ணையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் வியாழக்கிழமை வடக்கு கிழக்கை சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் அமைச்சர்கள்பங்குபற்றுதலுடன்மன்னாரைச் சேர்ந்தசிவில்அமைப்புக்களுடன்இணைந்து அமைச்சரைச் சந்தித்துப் பேசினோம். மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை கோபுரம் அமைப்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் நீண்டது.

கலந்துரையாடலில் எங்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிக்க கூடிய எந்த வாய்ப்பும் அங்கு கிடைக்கவில்லை. வருகை தந்த அதிகாரிகளும் சரி, அமைச்சர்களும் சரி எமது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி செவி மடுக்கவும் இல்லை. தொடங்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதையே அவர்கள் வலியுறுத்தினர். தவிர, பாதிப்புக்கள் சம்மந்தமாகவோ அல்லது மக்கள் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள் என்பதையோ அவர்கள் கண்டுகொள்ளவில்லை

மின்சார சபையினுடைய நிறைவேற்று அதிகாரிகள் உண்மைக்கு மாறான தகவல்களையும், பொய்யான விடையங்களையும் அக்கூட்டத்தில் முன் வைக்க முயன்றார்கள். அதனை நாங்கள் முழுமையாக மறுத்தோம். மன்னார் தீவு பகுதியில் முமையாக காற்றாலை அமைப்பதையும், கணிய மண் அகழ்வதையும் நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்கின்ற விடயத்தை நாங்கள் வலியுறுத்தினாலும் அவர்கள் அதனை சாதகமாக பரிசீலிப்பதற்கான எந்த வாய்ப்புக்களையும் காண முடியவில்லை.

மாறாக மீண்டும் பேச்சு நடத்திக் காலத்தை கடத்திஇத்திட்டங்களைநிறைவேற்றவேண்டும் என்றஅடிப்படையில்தான்அவர்கள்உள்ளனர். இது கடந்த ஆளும்தரப்பால் வழங்கப்பட்ட திட்டம் என கூறிக் கொண்டாலும்கூட இந்த ஆளும்தரப்புத்தான்ஹேலிஸ்நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஏனைய மண் விவகாரங்களுடனும் தொடர்புபட்டு இருக்கின்றது என்கின்ற விடையத்தை நாங்கள் ஆதாரத்துடன் கூறினோம். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இரண்டு வாரத்தில் அரசுத் தலைவரைச் சந்தித்து குறித்த விடயத்தை முடிவுறுத்தலாம் எனஅமைச்சர்கள்கூறியுள்ளனர்.தற்காலிகமாக இத்திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என ஊடகங்களில் வெளி வந்துள்ள செய்தியை பார்க்கின்றபோது எமக்கு கவலையை ஏற்படுத்துகின்றது. அவ்விதமான எந்த முடிவும் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. ஆலோசிக்கப்பட்டதே தவிர எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை. குறித்த கூட்டம் முடிவின்றியே முடிந்து போனது.

குறித்தகலந்துரையாடலில்கலந்துகொண்ட எங்களுக்கு அந்தச் சந்திப்பில் எவ்வித திருப்தியும் இல்லை. ஆளும்தரப்பு தாம் நினைத்தபடி இனப்பிரச்சினை விவகாரத்தை எவ்வாறு கையள்கின்றதோ அவ்வாறு தான் அபிவிருத்தி திட்டங்களையும் கையாள

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# வெளிநாடுகளில் இருந்து திரும்பியோரிடமே மலேரியா நோய் அடையாளப்படுத்தப்படுகிறது

## யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கை

இலங்கையில் தற்போது வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்களிடமே மலேரியா இனங்காணப்படுவதாக யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி கேதீஸ்வரன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மலேரியா நோய் பரம்பல் முழுமையாக ஒழிக்கப்பட்டதாக 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தபட்டது. அதன் பின்னர் உள்ளூரில் பரவும் மலேரியா நோயாளர்கள் யாரும் எமது நாட்டில் இனங்காணப்படவில்லை.

ஆயினும், உலகில் பல நாடுகளில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென்அமெரிக்கா கண்டங்களில் உள்ள பல நாடுகளில் மலேரியா நோயின் பரம்பல் இன்னமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் எமது நாட்டைச் சேர்ந்த பல இளைஞர்கள் ஐரோப்பிய, வடஅமெரிக்க கண்டங்களுக்குச் சட்ட விரோதமாக சென்று குடியேறும் நோக்குடன் ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று தங்கியுள்ளனர்.

இவர்களில்பலர்ஐரோப்பிய, வடஅமரிக்ககண்டங்களுக்குச் செல்ல முடியாது பல மாதங்களாக ஆபிரிக்க நாடுகளில் தங்கியிருந்து விட்டு எமது நாட்டிற்குத் திரும்பி வரும்போது அவர்களிடையே மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறாக எமது நாட்டில் கடந்த பல வருடங்களாக மலேரியா அதிக பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று நாடு திரும்பியோர் மத்தியில் மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் 2021 ஆம் ஆண்டு 26 பேரும், 2022 இல் 37 பேரும், 2023 இல் 62 பேரும், 2024 இல் 38 பேரும், 2025 இல் 29 பேரும் என நாடு திரும்பியோர் மத்தியில் மலேரியா நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறே யாழ் மாவட்டத்திலும் 2021 ஆம் ஆண்டு 2 பேரும், 2022 இல் 7 பேரும், 2023 இல் 6 பேரும், 2024 இல் 2 பேரும், 2025 இல் இது வரையான காலப்பகுதியில் 5 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த வாரம் யாழ் மாவட்டத்தில் இருவரிடம் மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது. இவர்கள் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஆபிரிக்க நாடான டோகாவிற்குச் சென்று கடந்த செப்ரெம்பர் 30 இலங்கைக்குத் திரும்பியவர்கள். இவர்களில் முதலாவது நோயாளியான நெடுந்தீவைச் சேர்ந்த 38 வயதான ஆண், ஒக்டோபர் 2 நெடுந்தீவை வந்தடைந்துள்ளார்.

இவர் ஏற்கனவே வேறு பல நோய்களுக்கு உட்பட்டிருந்தார். இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 4 கடுமையான நடுக்கம், மாறாட்டம் போன்ற அறிகுறிகளுடன் இரவு 10.30 மணிக்கு நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாகவே இடமாற்றம் செய்யப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உடனடியாகவே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒக்டோபர் 5 காலையில் இவரது குடும்பத்தினர் மூலம் இவர் ஆபிரிக்க நாட்டிற்கு சென்று வந்த தகவல் கிடைத்ததும் மலேரியாவிற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுஅவருக்குமலேரியா(ய்பழியிஉஷ்ஞ்ஜீழிஷற்து துழியிழிஷஷ்ழி) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அவருக்கு உடனடியாகவே மலேரியா நோய்க்கான ஊசி மருந்துகள் நாளத்தின் ஊடாக ஏற்றப்பட்டது. தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட மலேரியாவிற்கான குருதிப் பரிசோதனையில் ஒக்டோபர் 7 அவரது குருதியில் மலேரியா கிருமிகள் முற்றாக அழிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. ஆயினும், அவருக்குக் காணப்பட்ட பல்வேறு வேறு நோய் நிலைகளால் அவர் சுய நினைவற்ற நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையிலேயே தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படிநோயாளியுடன்யாழ்ப்பாணம்அல்லைப்பிட்டியைச் சேர்ந்த 30 வயதான இளைஞர் ஒருவரும் டோகா நாட்டில் தங்கியிருந்து நாடு திரும்பியுள்ளார். இத்தகவல் கிடைத்ததுமே மலேரியா தடுப்பு இயக்க உத்தியோகத்தர்கள் இவருக்கு மலேரியாபரிசோதனைகளைமேற்கொண்டபோது இவருக்கும் மலேரியா (ய்பழியிஉஷ்ஞ்ஜீழிஷற்து துழியிழிஷஷ்ழி) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் இவருக்கு காய்ச்சலோ அல்லது வேறு எந்த நோய் அறிகுறிகளோ காணப்படவில்லை.

இருப்பினும்,இவரையும்யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதித்து மலேரியாவிற்கான முழுமையான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்த 2 நோயாளிகளைப் பொறுத்த வரையில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எவ்விதத் தாமதமும் இன்றி உடனடியாக தமது மலேரியா தடுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

எமது நாட்டில் மலேரியா நோயின் உள்ளூர் பரம்பல் முற்றாக ஒழிக்கப்பட்டாலும் மலேரியா நோயைப் பரப்புகின்ற நுளம்புகள் இன்னமும் காணப்படுகின்றன. எனவே, மேற்படி நோயாளர்களிடம் இருந்து அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மலேரியா நோய் பரவாதிருக்க அவர்களது வதிவிடங்களைச்சுற்றிநுளம்புகளுக்கானபூச்சியியல்ஆய்வும், நுளம்புகளை அழிக்கும் புகையூட்டல் நடவடிக்கைகளும் வீடுகளுக்கான நுளம்பு கொல்லி மருந்துகளை விசிறும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கும் நோக்குடன் மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குச் செல்லும் பொது மக்கள் பண்ணையில் அமைந்துள்ள மலேரியா தடுப்புப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு மலேரியா தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அவர்கள் அந்த நாடுகளில் தங்கியுள்ள காலப்பகுதியில் இத்தடுப்பு மருந்துகளைப் பாவிப்பதன் மூலம் மலேரியா நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளலாம். அடுத்ததாக மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் நாடு திரும்பியவுடன் மலேரியாவிற்கான குருதிப் பரிசோதனையை எமது வைத்தியசாலைகளில் மேற்கொண்டு உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, பொது மக்கள் அனைவரும் மலேரியா பரம்பல் அதிகமாகக் காணப்படும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க கண்டங்களுக்குச் செல்லும் போது மேற்படி பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கையாண்டு எமது நாட்டில் மலேரியா நோய் பரவாதிருக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒற்றுமைச் சிதைவு தமிழர்களின் சாபக்கேடா?

கனடாவில் வசிக்கும் தமிழர் சமூகத்திற்கான வருடாந்திர 'தமிழர் தெரு திருவிழா' (Tamil Street Festival) பல ஆண்டுகளாக கலாச்சாரம், பாரம்பரியம், கலை, வாணிபம், உறவுநிலை ஆகியவற்றின் சங்கமமாக இருந்து வந்துள்ளது. தாய்நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தில் வாழ்ந்தாலும், அந்த நிழலில் தமிழர் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் அங்கே வாழும் இளம் தலைமுறைக்கு கற்றுத்தரவும், தமிழர்களின் சமூகப் பிணைப்பை வலுப்படுத்தவும் இந்த விழா முக்கிய பங்காற்றி வந்தது. ஆனால், இந்த வருடம் அந்த விழா நடத்தப்படவில்லை. காரணம் — அங்குள்ள சில தமிழ் அமைப்புக்கள் இந்த விழாவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், ஏற்பாட்டாளர்கள் விழாவை நிறுத்திக் கொண்டனர்.

இந்தச் சம்பவம், வெளிநாட்டில் வாழும் தமிழர்களிடையே உருவாகி வரும் ஒற்றுமையின்மையை வெளிப்படுத்தும் மிகத் தெளிவான எடுத்துக்காட்டாகும். தாயகத்தில் போர், அழிவு, இடம்பெயர்வு ஆகிய கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்கள், பாதுகாப்பான வாழ்வையும், சமூக வளர்ச்சியையும் தேடி உலகம் முழுவதும் புலம்பெயர்ந்தனர். அவர்கள் தங்களின் மொழி, கலாச்சாரம், அடையாளம் ஆகியவற்றைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பல்வேறு நாடுகளில் சங்கங்கள், அமைப்புக்கள், நிகழ்ச்சிகள் மூலம் ஒன்றுபட்டுச் செயல்பட்டனர். ஆனால் காலப்போக்கில், கருத்து வேறுபாடுகள், அரசியல் சாயல்கள், தனிப்பட்ட நலன்கள், மற்றும் அதிகாரப் போட்டிகள் இந்த ஒற்றுமையை மெதுவாகக் குறைத்தன.

கனடாவில் இந்த வருட 'தமிழர் தெரு திருவிழா' நிறுத்தப்பட்டிருப்பது, இந்தப் பிரிவினையின் வெளிப்படையான விளைவாகும். சில அமைப்புக்கள், ஏற்பாட்டாளர்களின் செயல்பாடுகள் அல்லது அணுகுமுறையில் குறை காணலாம். விமர்சனங்கள், வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால், அவை சமூக நலனுக்கான பொதுவான மேடையை முற்றிலும் நிறுத்திவிடும் அளவிற்கு சென்றுவிட்டால், அதனால் பாதிக்கப்படுவது ஒரே ஒரு அமைப்பு அல்ல — முழு சமூகமுமே.

தமிழர்கள் வெளிநாடுகளில் வாழ்வது, எளிதான காரியம் அல்ல. அங்கே அவர்கள் தங்களின் அடையாளத்தைத் தக்கவைக்க வேண்டிய சூழலில், ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் மட்டுமே அதனைச் சாத்தியமாக்க முடியும். ஒரு தெரு திருவிழா வெறும் கலை நிகழ்ச்சி அல்ல — அது ஒரு சமூகச் சந்திப்பு, வாணிப வளர்ச்சிக்கான வாய்ப்பு, இளம் தலைமுறைக்கு பாரம்பரியத்தை அறிமுகப்படுத்தும் பாடசாலை, மற்றும் உள்ளூர் அரசியல் அமைப்புகளுக்கு தமிழர்களின் பங்களிப்பையும் ஆற்றலையும் காட்டும் பொது மேடை. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பாதிப்பது, அந்த சமூகத்தின் வலிமையைத் தளரச் செய்வதாகும்.

இங்கு முக்கியமான கேள்வி — ஏன் இத்தகைய நிகழ்ச்சிகளில் பிரிவினை உருவாகிறது?

முதலாவது, வெளிநாட்டில் உள்ள தமிழ் அமைப்புக்கள் பலவற்றிற்கும் தாயக அரசியல் சூழலின் தாக்கம் இன்னும் நீங்கவில்லை. தாயகத்தில் உள்ள அரசியல் பிளவுகள், புலம்பெயர் சமூகத்திலும் பிரதிபலிக்கின்றன. இரண்டாவது, அமைப்புக்களின் தலைமைத்துவம் மற்றும் முடிவெடுக்கும் நடைமுறைகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை குறைவாக இருப்பது. இது பரஸ்பர நம்பிக்கையை பாதிக்கிறது. மூன்றாவது, தனிநபர் கண்ணோட்டங்கள் மற்றும் 'நான் — நீ' பிரிவுகள், பொதுநல இலக்குகளை மங்கச் செய்கின்றன.

இந்தச் சூழலில், தமிழர் சமூகத்திற்கு தேவையானது — 'கருத்து வேறுபாடு இருந்தாலும், பொதுநல இலக்கில் ஒன்றுபடுதல்' என்ற மனப்போக்கு. அரசியல் கருத்துக்கள், கடந்தகால வேதனைகள், அமைப்பு போட்டிகள் ஆகியவை சமூக விழாக்கள், கல்வி நிகழ்ச்சிகள், நலத்திட்டங்கள் போன்றவற்றின் பாதையை மறிக்கக்கூடாது. தாயகத்தில் நடந்த போரால் சிதைந்த நமது அடையாளத்தை, உலகின் பல பாகங்களிலும் நாம் மீண்டும் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டுமானத்தை நாமே இடித்து வீழ்த்தினால், எதிர்கால தலைமுறைக்கு நாம் எந்தச் செய்தியை விட்டுச் செல்கிறோம்?

கனடாவில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் ஒரு எச்சரிக்கை மணி. இன்று ஒரு தெரு திருவிழா நிறுத்தப்பட்டது; நாளை, மொழிப் பாடசாலைகள், கலாசாரக் குழுக்கள், விளையாட்டு போட்டிகள், நலத்திட்டங்கள் — எதையும் இதே பிரிவினை ஆபத்துக்குள்ளாக்கும். தமிழர் சமூகத்தின் வலிமை, அவர்களின் ஒற்றுமையில் தான் உள்ளது. அதனை தகர்க்கும் எந்தச் செயலும், இறுதியில் நமது பிள்ளைகளின் அடையாளத்தைத் தளர்த்தும். எனவே, வெளிநாட்டு தமிழர் தலைவர்கள், அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் — யார் ஆனாலும் — தங்கள் தனிப்பட்ட, அரசியல், கருத்து வேறுபாடுகளைப் பொது மேடைகளில் தாண்டி, சமூக நலனுக்காக கைகோர்க்க வேண்டும். வித்தியாசங்கள் இயல்பானவை; ஆனால் ஒற்றுமையை நிலைநிறுத்தும் திறன் தான் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது.

தமிழர் தெரு திருவிழா மீண்டும் நடைபெற வேண்டும். அது, எதிர்காலத்தில் எத்தகைய கருத்து முரண்பாடுகளும் இத்தகைய பொது விழாக்களை பாதிக்காது என்ற ஒப்பந்தத்துடன் இருக்க வேண்டும். கனடாவிலும், உலகின் எங்கும், நமது ஒற்றுமை — நமது அடையாளத்தின் முதுகெலும்பாகத் தொடர வேண்டும். இல்லையெனில், இன்று நிறுத்தப்பட்ட ஒரு விழா, நாளை அழிந்துபோகும் ஒரு சமூகமாக மாறி விடும் அபாயம் உண்டு.

## தோட்டப் படிக்கட்டுக்களைச் சீர்செய்ய வலியுறுத்தி லிந்துலையில் போராட்டம்

லிந்துலை பெயார்பீல்ட் தோட்ட படிக்கட்டுக்களை செப்பனிடுமாறு கோரி முற்பகல் 11 மணியளவில் லிந்துலை நாகசேனை பிரதான வீதியில் 80க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லிந்துலைபெயார்பீல்ட் தோட்டபடிக்கட்டுக்களானது 2021ஆம்ஆண்டுலிந்துலை-டயகமவீதிஅபிவிருத்திப் பணிகளுக்காக வீதி அதிகாரசபையால் அகற்றப்பட்டது. 3 வருடங்கள் கடந்தும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட படிக்கட்டுக்களும் மண்சரிவு அபாயம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. அதனை நிரந்தரமாக செப்பனிட வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்வராமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இத்தோட்டத்துக்குச் செல்லும் நான்கு கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதி மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்திற்கு இடையூறாகியுள்ளது. எனவே, அதனையும் செய்து தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அத்தோடு குறுக்கு வீதியில் பாதுகாப்பற்ற பாலம் ஒன்று காணப்படுவதால் பாலத்தைக் கடக்கும்போது பலர் விழுந்து ஆபத்துக்குள்ளாகினர் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே இத்தோட்ட மக்களின் கோரிக்கையாகும்.

## போதை மாத்திரை விற்க முயன்ற இளைஞர் சுன்னாகத்தில் கைது

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் போதை மாத்திரைகளை விற்பனை செய்ய முயன்ற இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதை மாத்திரைகளை இளைஞன் ஒருவர் விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்வதாக சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், பொலிஸார் இளைஞரை மறித்துச் சோதனையிட்டனர். அவரிடமிருந்து 500 போதை மாத்திரைகளை கைப்பற்றியதுடன், இளைஞனையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்விச் சீர்திருத்தம் குறித்தும் பிரதமர் ஆஸி. ஆளுநர் நாயகத்திற்கு விளக்கம்

அனைவராலும்பெற்றுக்கொள்ளக்கூடிய,உயர்தரக் கல்வி முறைமையைக் கொண்டிருப்பதற்காக அமுல்படுத்தப்படவிருக்கும், இலங்கையின் புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் ஆஸ்ரேலிய ஆளுநர் நாயகத்திற்கு பிரதமர் விளக்கமளித்தார்.

இலங்கைக்கு வருகைத் தந்துள்ள ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டினுக்கும், பிரதமர் ஹரிணிக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது.

இச்சந்திப்பானது இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான சந்தர்ப்பமாக அமைந்தது. பிரதமரால் வரவேற்கப்பட்ட ஆளுநர் நாயகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, குறிப்பாக அரசியல்,பொருளாதாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடுஅனைவராலும்பெற்றுக்கொள்ளக்கூடிய, உயர்தரக்கல்விமுறைமையைக்கொண்டிருப்பதற்காக அமுல்படுத்தப்படவிருக்கும், இலங்கையின் புதிய கல்விமறுசீரமைப்புதொடர்பில்ஆளுநர்நாயகத்திற்கு பிரதமர் விளக்கமளித்தார்.

இதன்போது, அவுஸ்திரேலியாவின் கல்வி முறைமை குறித்து ஆளுநர் நாயகம் பிரதமருக்குத் தெளிவுபடுத்தியதுடன், இத்துறையில் மிக நெருக்கமாக இணைந்து செயற்படுவதற்கான தமது ஆர்வத்தினையும் வெளிப்படுத்தினார். மேலும், இரு தரப்பினரும் பாலின சமத்துவத்துக்கான தமது நடைமுறைகளைபிரதிபலிக்கும்வகையில்,அரசியலில் பெண்களின்பங்கேற்பையும்,தலைமைத்துவத்தையும் அதிகரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பயனுள்ள கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அத்தோடு, இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குஅவுஸ்திரேலியாதொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என உறுதியளித்த ஆளுநர் நாயகம், பல துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடினார்.

## ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகத்துடன் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு

இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பு வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ளஆஸ்திரேலியஉயராணையரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயராணையரின் அழைப்பிற்கமைய இடம்பெற்ற நிகழ்வின்போதே இந்த சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியவுக்கும்இலங்கைக்கும்இடையிலே நிலவி வரும் நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதில்கவனம்செலுத்திஇங்குசுமுகமான உரையாடலில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நமது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியைச்சமாளிக்கத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருட்களுக்கு அவுஸ்திரேலியாவில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்












காலைக்கதிர் Kalaikkathir

## அமெரிக்க வரிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைகின்றது. தான்தோன்றித்தனமாக இத்திட்டங்களை தாங்கள் நினைத்தபடி செய்து முடிக்கலாம் என யோசிக்கின்றது. இவ்விடயங்களில் மன்னார் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒன்று கூடி மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்த வேண்டும். ஜனநாயக ரீதியாக ஆளும்தரப்பிற்குப் பெரும் நெருக்கடியைக்கொடுக்கும்வகையில்நாங்கள் அணி திரளாது விட்டால் இத்திட்டங்களை எங்களினால்நிறுத்தமுடியாத ஒருதுர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

ஆபத்தான ஒரு நிலையை நோக்கி இத்திட்டங்கள்நகர்ந்துசெல்கின்றன. சில அற்ப சொற்ப சலுகைகளுக்காக சில கிராமங்களில் இதைச் செயல்படுத்துகின்ற நிறுவனங்கள் மக்கள் சிலருக்கும், அமைப்புகளுக்கும் சில சலுகைகளை வழங்கி அவர்களை விலைக்கு வாங்கித் தமக்குச் சாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்திட முயற்சிக்கின்றார்கள். எனவே இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து ஜனநாயக ரீதியாகப் போராடி எங்களுடைய வாழ்வியல் இருப்பு உரிமையையும் வாழ்வாதார இருப்பையும் மன்னாரினுடைய உரிமையையும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் எல்லோரும் முன்வர வேண்டும்.

ஆளும்தரப்பை நம்பி நாங்கள் அதன் கருத்துக்களுக்கு செவி சாய்ப்பதன் மூலம் இந்த விடயங்களில் எமக்கு முன்னேற்றம் ஏற்படும் என்றோ அல்லது சாதகமான பதில் கிடைக்கும் என்றோ அல்லது அரசு இந்தத் திட்டங்களை நிறுத்தும் என்றோ நாங்கள் நம்பவும் இல்லை. நம்பக்கூடிய அளவுக்கு அவர்களும் இல்லை.

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாகஇந்தப்பாதிப்புகள்பற்றிதெரிவித்து வந்தாலும்கூட குறித்த கூட்டத்தின்போது அங்கு வருகை தந்த அதிகாரிகள் முதலாவது தடவையாக இவ்விடயங்கள் பற்றி பேசுவது போல் நடந்து கொண்டார்கள்.

கடந்த காலத்தில் முன் வைக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அவர்கள் கண்டு கொள்ளவும் இல்லை. அவ்வாறான ஆவணங்கள் இருப்பதாகக்கூட அவர்கள் தெரிவிக்கவில்லை.

குறித்த காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களையும் மன்னார் தீவு பகுதிக்குள் நடைமுறைப்படுத்த விட முடியாது என்பதில் நாம் திட்டவட்டமாக இருக்கின்றோம். ஆனால்ஆளும்தரப்புகுறித்த இரு திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்என்பதில் பிடிவாதமாக இருக்கிறது. அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டிற்கு வருமானம் கிடைக்கும் என்கிற வகையிலும் அரசு யோசிக்கிறது.

இதனை நிறுத்துவதற்கான சக்தி மக்களின் கைகளில்தான் இருக்கிறது. இத்திட்டங்களை நிறுத்துவதற்கு நீங்கள் தார்மீக அடிப்படையில் இந்த மண்ணைக் காத்துக்கொள்ளவேண்டும்என்றஎண்ணத்தில் போராட முன்வரவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

## எதிர்க் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரதூரமானதாகுமென ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமார வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைதொடர்பில்கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புக்கு எதிராக அதற்குள்ளும் வெளியிலும் சதித்திட்டங்கள் இடம்பெறுவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். சதித்திட்டங்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய பலம்அரசுத்தலைவருக்கு இருக்கவேண்டும். அதேநேரம் மக்கள் ஆணையில் தெரிவான அரசுத் தலைவர் என்ற வகையில் அந்தச் சதித் திட்டங்களை வெளிப்படுத்துவது நாட்டுக்கு முக்கியமாகும். எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்புக்கு எதிராகச் சதித் திட்டம் செய்வதாகத்தெரிவிப்பதுஅடிப்படையற்றதாகும். எங்களைப் பொறுத்தவரை ஆளும்தரப்புக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் போதாது. அதனால், எதிர்க்கட்சிகளிடமிருந்து ஆளும்தரப்புக்கு எதிரான சதித்திட்டம் இல்லை என்பது தெளிவாகிறது.

ஆனால்ஆளும்தரப்பிற்குள்சதித்திட்டங்கள் இடம்பெறுவதை காணலாம். பிரதமர் ஹரிணி, சிசி விண்வெளி தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பிழையென, அமைச்சர் வசந்த சமரிசங்க தெரிவித்திருக்கும்கருத்து பாரதூரமானதாகும். நாட்டின்பிரதமருக்குஎதிராகஆளும்தரப்பினரே இப்படிக் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அதேநேரம் அவர் நாடாளுமன்றத்துக்கு பிழையான தகவல் வழங்கியிருப்பதானது, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு காரணமாகிறது. அதனால் பிரதமர் அந்த கருத்தை சரி செய்ய வேண்டும். அல்லது, வாபஸ்பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. அதேநேரம் சிசியை சரி கண்டு தெரிவித்த கருத்தால், அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்புக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆளும்தரப்புக்குள் இருக்கும் குழப்பமே இதற்குக் காரணமாகும்.

அத்துடன் ஆளும்தரப்புக்கு எதிரான சதித்திட்டம் ஆளும்தரப்பிற்குள்ளேயே இருக்கிறது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பலம், உள்ளூராட்சி மன்ற அதிகாரம் என அனைத்தும் கிடைத்துள்ள நிலையில், ஆளும்தரப்பு அதிகாரத்தைப் பிடித்து ஒருவருடம் கூட இல்லாத நிலையில், அரசுத் தலைவர் அவசரமாக நாடாளுமன்றத்துக்கு வந்து இந்தளவு ஆவேசமாக உரையாற்ற முற்பட்டுள்ளதன் மூலம் அவருக்கு ஏதோ ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பது நிச்சயம்.

அரச தலைவர் ஒருவர் சாதாரண மாக நாடாளுமன்றத்துக்கு வந்து உரையாற்றுவதில்லை. ஏதாவது விசேட சந்தர்ப்பங்களிலேயே அவ்வாறு உரையாற்றுவார். அல்லது மக்களுக்கு உரையாற்றுவார். ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து உரையாற்றும் அளவுக்கு விசேடமாக எதுவும் இருக்கவில்லை. ஆளும்தரப்புக்கு இருந்துவந்த மக்கள் ஆணை தற்போது நீர்த்துப்போயுள்ளது. அதனால் அவர்களுக்கு ஒருவகையான அச்சம் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது.

அதேநேரம் இலங்கையில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த இந்த ஆளும்தரப்பு 18 வருடங்களாவது ஆட்சியில் இருக்கவேண்டும் எனசீனகம்யூனிஸ்கட்சிதெரிவித்ததாகஜேவிபி செயலாளர்ரில்வின்சில்வாதெரிவித்திருக்கிறார். சீனாவுடன் இணைந்துகொண்டு, ஆளும்தரப்பு எமது நாட்டை கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு கொண்டுசெல்ல முயற்சிக்கிறது என்ற விடயம், எமது அண்மை நாடான இந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். எமது நாட்டுடன் மிகவும் நெருக்கமான உறவை வைத்திருக்கும் இந்தியா இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ரில்வின் சில்வாவின் அறிவிப்பால் இந்தியா குழப்பமடைந்திருக்கிறது. அநுரகுமார ஜனாதிபதியாக இருந்தாலும் இந்த ஆளும்தரப்பின் அரசியலை கையாளும் நபர் ரில்வின் சில்வா என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும். அதனால் இது நாட்டுக்கு நல்லதில்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2025இல் வெளியிடப்பெற்றது